# ஸ்மார்ட் மீட்டர் (SMART METER)




- ஸ்மார்ட் மீட்டர் என்பது மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் கொண்ட ஒரு மின் மீட்டர் ஆகும்
- இந்த மீட்டரானது, நுகர்வோர்களின் மின்சார பயன்பாட்டை அளவீடு செய்வதுமட்டுமல்லாமல், அது குறித்த விவரங்களை, மின் கட்டணம் கணக்கிடுதல் மற்றும் கண்காணித்தல் தேவைகளுக்காக, மின்சாரம் வழங்கும் நிறுவனத்திற்கு பகிரக்கூடிய வசதி கொண்டதாகும்
- இவை பொதுவாக 15 நிமிடங்கள் அல்லது 1 மணி நேரத்திற்கு ஒரு முறை விவரங்களை பதிவு செய்து, பதிவு செய்யப்பட்ட விவரங்களை, குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது பகிரக்கூடியவை

## நன்மைகள்

- நுகர்வோர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு தானியங்கி (automatic) வசதி மூலம் மின்சாரம் வழங்கும் நிறுவனத்திற்கு பகிரப்படுவதால், மின் கணக்கீடு செய்யும்போது ஏற்படும் பிழைகளுக்கு (human error) வாய்ப்பில்லை
- இதில் முன்னதாகவே கட்டணம் செலுத்தி மின்சாரத்தை பயன்படுத்தும் ப்ரீபெய்டு (Prepaid)வசதி உள்ளதால், நுகர்வோர்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வழிவகுக்கும்
- நுகர்வோர்கள் தங்கள் மின் நுகர்வு குறித்த விவரங்களை தெரிவிக்கும் (alert) வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
- இவற்றில் இருபக்க மின்னோட்டத்தினை (Bidirectional flow) அளவீடு செய்யும் வசதி இருப்பதால், மேற்கூரை சோலார் அமைக்கவிருக்கும் நுகர்வோர்கள் தங்கள் மின் மீட்டரை மாற்ற வேண்டிய அவசியமில்லை
- எவரேனும் மீட்டரை சேதப்படுத்த முற்படும்பட்சத்தில் (meter tampering), உடனடியாக மின்சாரம் வழங்கும் நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கும் வசதி உள்ளது

**சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.)**

*புதிய எண். 246, பழைய எண். 277-B, டி.டி.கே. ரோடு, (ஜெ.ஜெ.ரோடு), ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.*

*தொலைபேசி 91-44-2466 0387/2499 4458*